**ஜூன் - 10**

# TNPSC துளிகள்

- இந்திய விமானப்படை தனிமைப்படுத்தப்பட்ட முறையிலான ஒரு போக்குவரத்திற்காக வேண்டி ஒரு வான்வழி மீட்பு விமானத்தை வடிவமைத்து உருவாக்கித் தயாரித்துள்ளது.
- அசாமில் ஓர் எரிவாயுக் கிணற்றிலிருந்து இயற்கை எரிவாயுவானது ஒரு நிலவெடிப்பிற்குப் பிறகு தொடர்ந்து வெளியேறி வருகின்றது.
    - அசாமின் தின்சுகியா மாவட்டத்தில் உள்ள ஆயில் இந்தியா நிறுவனத்தின் பாக்ஜன் எரிவாயுக் கிணற்றில் ஏற்பட்ட வெடிப்பிற்குப் பின் இது நடந்திருக்கின்றது.

# தேசியச் செய்திகள்

## இந்திய நிலக்கரிப் பரிமாற்றச் சந்தை

- நிலக்கரித் துறையில் வணிக ரீதியில் சுரங்கத் துறையை மேம்படுத்துவதற்கு வேண்டி இந்தியா விரைவில் நிலக்கரி வர்த்தகத் தளத்தை அமைக்கவுள்ளது.
- இந்த திட்டத்தின் கீழ், நாட்டில் உற்பத்தி செய்யப்படும் முழு நிலக்கரியும் 'நிலக்கரிப் பரிமாற்றச் சந்தை' என்ற தளத்தில் வர்த்தகம் செய்யப்படும்.
- நிலக்கரிப் பரிமாற்றம் ஒரு இணையவழி நிலக்கரி வர்த்தகத் தளமாக இருக்கும். அதில் விலை என்பது தேவை மற்றும் வழங்கல் அடிப்படையில் ஒரு வெளிப்படையான முறையில் நிர்ணயிக்கப் படும்
- இந்தியாவின் முதல் நிலக்கரி வர்த்தகத் தளத்தை அமைப்பது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். ஏனெனில் இது நிலக்கரித் துறையில் மிகுதியான அளவில் அதனை வாங்குபவர்களும் விற்பவர்களும் நுழைவதற்கு வழிவகுக்கிறது.
- இந்தியாவில் நிலக்கரி ஒழுங்கான முறையில் விற்பனை செய்வதற்கான ஒரே வர்த்தகத் தளமாக நிலக்கரிப் பரிமாற்றம் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## நைமிஷா 2020

- புது தில்லியின் நவீன கலைக்கான தேசியக் கலைக்கூடமானது இணையவழியாக நைமிஷா 2020 எனும் ஒரு கோடைக்கால கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய உள்ளது.
- இது கலைஞர்களிடமிருந்துப் பங்கேற்பாளர்களுக்கும் கலை ஆர்வலர்களுக்கும் கலையை உருவாக்குவதற்கும் மற்றும் அதனைக் கற்றுக் கொள்வதற்கும்

தேவையான வாய்ப்பை வழங்குவதற்கான ஒரு முயற்சியாகும்.

- இந்த நிகழ்ச்சியிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட கலைப் படைப்புகளின் ஒரு கண்காட்சி நவீன கலைக்கான தேசியக் கலைக்கூடத்தின் கலை ஊடகத் தளமான சோஹாமில் காட்சிப் படுத்தப்படும்.
- நவீன கலைக்கான தேசியக் கலைக்கூடமானது 1954 ஆம் ஆண்டில் புது தில்லியின் ஜெய்ப்பூர் மாளிகையில் நிறுவப் பட்டது.
- இது இந்திய அரசாங்கத்தின் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் ஒரு துணைநிலை அலுவலகமாக நடத்தப்பட்டு நிர்வகிக்கப் படுகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இஸ்ரோ ஒப்பந்தம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பானது சமீபத்தில் நைனிடாலின் ஆர்யபட்டா ஆராய்ச்சி நிறுவன கண்காணிப்பு அறிவியல் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இது விண்வெளிச் சூழ்நிலை விழிப்புணர்வு மற்றும் வானியற்பியல் துறை ஆகியவற்றின் மீதான ஒத்துழைப்புடன் செயல்படுகிறது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் இந்தியாவின் விண்வெளிச் சொத்துக்களை விண்வெளிச் சிதைவு அல்லது விண்வெளிக் குப்பை என்ற அச்சுறுத்தல்களிலிருந்துப் பாதுகாப்பதாகும்.
- விண்வெளிச் சூழ்நிலை விழிப்புணர்வின் கீழ், சிதைவுகள் அல்லது குப்பைகள் கண்காணிப்பு, மோதல் தவிர்ப்பு, செயற்கைக் கோள் ஒழுங்கின்மையைக் கண்டறிதல், விண்வெளி வானிலை நிலையத்திலிருந்து வரும் அச்சுறுத்தல்களைக் கண்காணித்தல், சிறுகோள்கள் மற்றும் விண்கற்கள் ஆகியவற்றின் அச்சுறுத்தல்களைக் கணித்தல் ஆகியவற்றின் மீது இந்தியா கவனம் செலுத்துகிறது.

## இணையக் கட்டுப்பாட்டு இயந்திர மனிதன்

- மகாராஷ்டிராவின் தானேவைச் சேர்ந்த ஒரு பொறியியலாளர் இணையம் மூலம் கட்டுப்படுத்தும் ஒரு இயந்திர மனிதனை உருவாக்கியுள்ளார்.
- டொம்பிவாலியில் உள்ள பிஎன்டி சொல்யூஷன் என்ற துவக்க நிறுவனத்தின் நிறுவனர் பிரதிக் திரோட்கர் இதை வடிவமைத்து உருவாக்கியுள்ளார்.
- இதற்கு கோரோ-போட் என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இம்மாதிரியில் இதுவே முதல் வகையானது.
- மும்பையின் கல்யாணில் உள்ள ஹோலி கிராஸ் மருத்துவமனையில் கோரோ-போட் முதன்முறையாக நிறுவப் பட்டுள்ளது.
- இது செவிலியர்கள் அல்லது வார்டு பணியாளர்கள் நோயாளிகளுடன் மேற்கொள்ள வேண்டிய நேரடித் தொடர்பை நீக்குகிறது.
- உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் ஒரு செயலி மூலம் இதைக் கட்டுப்படுத்தும் ஒரு சிறப்பு வசதி இதில் உள்ளது.
- மருத்துவத் துறையில், பொருட்களின் இணையம் (இன்டர்நெட் ஆஃப் திங்ஸ்) என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட உலகின் முதல் இயந்திர மனிதன் இதுவாகும்.



## வளிமக் கரைசல்களின் கதிர்வீச்சு கட்டாயப்படுத்துதல் - வெளிப்புற இமயமலை


- அண்மையில், ஆர்யபட்டா கண்காணிப்பு அறிவியலுக்கான ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஆய்வில், வளிமக்கரைசல்களின் கதிர்வீச்சு கட்டாயப்படுத்துதல் என்ற ஒரு நிகழ்வு கண்டறியப் பட்டுள்ளது. அதாவது மனிதர்களின் தாக்கத்தால் வளிமக் கரைசல்கள் மேற்கு வெளிப்புற-இமயமலைகளின் உயர்நிலையில் அதிகமாக காணப்படுவதாகக் கண்டறியப் பட்டுள்ளது.
- வளிமக் கரைசல்களின் கதிர்வீச்சு கட்டாயப்படுத்துதல் என்பது மனிதர்களின்

தாக்கத்தால் வளிமண்டலத்தின் மேற்புறத்திலும் மேற்பரப்பிலும் உள்ள கதிரியக்கப் பாய்வுகளில் மற்றும் வளிமண்டலத்திற்குள் இருக்கும் கதிர்வீச்சை உறிஞ்சுவதாகும்.

- நைனிடாலில் உள்ள ஆர்யபட்டா கண்காணிப்பு அறிவியலுக்கான ஆராய்ச்சி நிறுவனமானது, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி ஆராய்ச்சி நிறுவனம் ஆகும்.
- வளிமக் கரைசல்கள் ஒரு வாயு அல்லது திரவச் சூழலில் மிதக்கும் திரவ அல்லது திடமான துகள்களின் ஒரு கலவையாக இருக்கும் என்று வரையறுக்கப் படுகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆறாவது பெரும் அழிவு




- தற்போது நடந்துக் கொண்டிருக்கும் ஆறாவது பெரும் அழிவானது நாகரிகத்தின்

நிலைத்தன்மைக்கு மிகவும் கடுமையான சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்களில் ஒன்றாக இருக்கலாம்.

- இந்த ஆராய்ச்சியானது அமெரிக்காவின் தேசிய அறிவியல் கல்விக் குழுமத்தின் செயல்முறைகள் இதழில் (Journal Proceedings of the National Academy of Sciences) வெளியிடப் பட்டுள்ளது.
- பெரும் அழிவு என்பது அழிவின் மீதான அளவின் கணிசமான அதிகரிப்பு அல்லது புவியியல் ரீதியாக குறுகிய காலத்தில் பூமி அதன் முக்கால்வாசிக்கும் மேற்பட்ட உயிரினங்களை இழப்பதைக் குறிக்கிறது.
- இதுவரை, பூமியின் முழு வரலாற்றிலும் ஐந்து பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன.
- கடந்த 450 மில்லியன் ஆண்டுகளில் நிகழ்ந்த ஐந்து பெரும் அழிவுகள் முன்பு இருந்த தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிரிகள் ஆகியவற்றின் 70-95 சதவீத உயிரினங்களை அழிக்க வழிவகுத்தன.
- தற்போது நடந்துக் கொண்டிருக்கும் ஆறாவது ஒன்று, மானுடச் செயல்களால் ஏற்படும் அழிவு என குறிப்பிடப் படுகிறது.
- உயிரினங்களின் இழப்பு நிரந்தரமானதாக இருக்கும் என்பதால் ஆராய்ச்சியாளர்கள் இதை "மிகவும் கடுமையான ஒரு சுற்றுச்சூழல் பிரச்சினை" என்று குறிப்பிட்டு உள்ளனர்.
- மனித குலத்தின் மூதாதையர்கள் 11,000 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயத்தை உருவாக்கியதிலிருந்து உயிரினங்களின் இழப்பு ஏற்பட்டு வருகின்றது.
- இதில் வெப்பமண்டலப் பகுதிகள் அதிகமாகக் குறைந்து வரும் உயிரினங்களைக் கண்டுள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★